**ஈகைத்திருநாள் வாழ்த்து!(25-06-2017)**

ஈகையே வாழ்வு என்றும்,
இறைவனின் கொடையே என்றும்,
ஏகமாய் சொன்னார் தூதர்,
ஏற்றவர் மனத்தில் கொண்டார்!
பகையிலா மாண்பினோடும்;
பசியெனும் உணர்வு கண்டும்,
தகைமையாய் நோன்பு கொண்டு,
கண்டிடும் பேருநாளில் வாழ்த்து!


**ஈகைத்திருநாள் வாழ்த்து!**

மண்ணிலோர் வாழ்வைத் தந்து,
மகிழ்வுடன் வாழ்க வென்ற;
புண்ணியனார் இறையருளால்,
அறநெறி தந்தார் **நபி** யே!
மன்னிய அறங்கள் காத்து,
மகிழ்வுடன் வாழ்ந்திருப்போம்!
நன்னிய மனத்தால் நவிலுவேன்,
**ஈகைத் திருநாள்** வாழ்த்து!

**- கவிவளவன் 05-06-2019**

**ஈகைத்திருநாள் வாழ்த்து!**

நமக்கே நமக் கென்று,
நண்ணுதற்கு ஏதுமில்லையென,
சுமக்கின்ற மனந்தன்னில்,
சுடரொளியாய், இறைவன் தான்;
தமக்கென்று எதையும் சேர்க்காத
நல் மனம் கொள்ள,
நமக்குச் சொன்ன நல்லுரைகள்
பலவுண்டு நானிலத்தில்!
அருளாளர் முகமதுவின் வழியில்,
இறைவன் சொன்னதுவே
இந்த **ஈகைத் திருநாள்!**
நோன்பிருந்து வழிபடுவோர் யாவருக்கும்
**இனிய ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்!**
03-05-2022





**ஈகைத்திருநாள் வாழ்த்து! (16-06-2018)**

மானுடம் தழைந்து மனிதம் வாழ,
இறைவன் அனுப்பியத் தூதராம்
முகமது நபிகள்; அன்பின் வழியை
அழகாய்ச் சொல்லி, நோன்பின் வழியில்
இறைமை காட்டி, ஈகை என்பதும்
இறைவன் வழியென; யாவர்க்கும் உணர்த்த
**ஈகைத் திருநாள்** கொண்டாட வைத்தார்!
அவ்வருளார் வழியில், இறைமை தேடும்;
அனைத்து உள்ளங்களுக்கும், நெஞ்சார்ந்த
**ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்**

**ஈகைத்திருநாள் வாழ்த்துக்கள்!**

மண்ணகம் போற்றும் மருவிலா அன்பினோடு;
பொன்னிகர் மாந்தர்கள் பொலிந்து வாழ்ந்திட,
அன்னவன் இறைத்தூதர் அருளாளன் வழியாக,
தன்னிகரில்லா இறையவன் தானும்வழி சொல்ல,

மன்னிய சீர்அறிவை மகிழ்ந்துப் போற்றிட,
இன்னிய மாந்தர் சிலரும் இயைந்து நடந்திட,
நன்னிய வழியாய்த் திகழ்ந்திடும் இஸ்லாம்!
புண்ணிய வழியாய்ப் பசியின் துன்பம்,

எண்ணியே மாந்தர் இயைந்து வாழ,
நோன்பு என்றோர் நெறிமுறைச் செய்து,
ஆன்ற வழியில் சமத்துவம் காண,
தோன்றிய நிதியே **ஈகைத் திருநாள்!**

**அனைவருக்கும் ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்!**

**கவிவளவன், 25-05-2020**